முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.48/2023

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் நாள் திங்கள்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துவாரகநாதன் | தந்தையார் பெயர் | சுப்பிரமணியன் |
| கிராமம் | குடியாத்தம் | வட்டம் | |
| தொழில் | | வயது | 52 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன். பிரமாண வாக்குமுலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணப் பட்டியல்படி **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்)**

தற்சமயம் இல்லை.

**குறுக்கு விசாரணை (5-ம் பிரதிவாதி தரப்பில்)**

5-ம் பிரதிவாதியை பொறுத்து ஆவணங்களும் முத்திரை கட்டணமும் முறையாக இருக்கும்பட்சத்தில் ஆவணங்களை சட்டப்படி பதிவு செய்யும் உரிமை உடையவர் என்றால் சரி. பட்டா மாறுதல் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற பரிகாரத்திற்கு வருவாய் கோட்டாட்சியருக்குதான் அதிகாரம் உண்டு எனவும் சமூகம் நீதிமன்றத்தை அணுக இயலாது எனவும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை பொறுத்து சமூகம் நீதிமன்றம் இறுதியாக பிறப்பிக்கும் தீர்ப்பிற்கு 5-ம் பிரதிவாதி தயாராக உள்ளார். 5-ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் அதுபற்றி தெரியாது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.08.04 14:31:30 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.